அரசாங்க தகவல் திணைக்களத்தினால் பாடசாலை மாணவர்களின் ஊடக எழுத்தறிவை மேம்படுத்துவதற்காக நடாத்தப்படும் அசிதிசி விதுமக பாடசாலை படைப்பாக்க போட்டித் தொடர் - 2026

பாடசாலை மாணவர் சமூகத்தின் ஊடக எழுத்தறிவு மற்றும் ஊடகம் சார்ந்த படைப்பாக்கத்தினை மேம்படுத்தும் நோக்கில், அரசாங்க தகவல் திணைக்களத்தினால் வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படும் "அசிதிசி விதுமக பாடசாலை படைப்பாக்க போட்டித் தொடருக்கான" ஆக்கங்களை ஏற்பது 2026 ஆகஸ்ட் மாதம் 05 ஆம் திகதி முதல் ஆரம்பமாகிறது.

இப்போட்டித் தொடரை மேலும் விரிவுபடுத்தி, 2026 ஆம் ஆண்டில் 10 போட்டிகளை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், இப்போட்டிகள் கனிஷ்ட, சிரேஷ்ட மற்றும் திறந்த ஆகிய வயதுப் பிரிவுகளின் கீழ் நடாத்தப்படும். (அதற்கமைய, "சிறந்த ஆய்வுக்கட்டுரை" போட்டி தவிர்ந்த ஏனைய போட்டிகள், தொடர்புடைய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வயதுப் பிரிவுகளின் கீழ் நடாத்தப்படும்.) "சிறந்த ஆய்வுக்கட்டுரை" போட்டியானது பாடசாலை ஆசிரியர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டுள்ளது.

கனிஷ்ட பிரிவு: தரம் 06 முதல் தரம் 09 வரை

சிரேஷ்ட பிரிவு: தரம் 10 முதல் தரம் 13 வரை

திறந்த பிரிவு: தரம் 06 முதல் தரம் 13 வரை (சில போட்டிகள் திறந்த பிரிவில் மாத்திரம் நடாத்தப்படும்.)

அத்துடன், இப்போட்டிகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். (சில போட்டிகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும் அதேவேளை, சில போட்டிகள் மொழியை கருத்திற்கொள்ளாது எந்த மொழியிலேனும் நடைபெறும்.)

பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகளில் அரச/ பகுதியளவு அரச /தனியார்/ சர்வதேச பாடசாலைகளின் மாணவ, மாணவிகள் பங்குபற்ற முடியும் என்பதுடன், பாடசாலை ஆசிரியர்களுக்கான "சிறந்த ஆய்வுக்கட்டுரை" போட்டியில் அரச / பகுதியளவு அரச / தனியார் / சர்வதேச பாடசாலைகளின் ஆசிரியர்களும் பங்குபற்ற முடியும்.

ஒவ்வொரு போட்டிக்கும், அந்தந்த போட்டிக்குறியவாறு வயதுப் பிரிவுகள் மற்றும் மொழி அடிப்படையில் தனித்தனியாக வெற்றியாளர்கள் (முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்கள் மற்றும் திறமைச் சான்றிதழ்கள்) தெரிவு செய்யப்படுவதுடன், அவ்வெற்றியாளர்களுக்கு பெறுமதியான சான்றிதழும் பரிசுகளும் வழங்கப்படும்.

சில போட்டிகளுக்கான படைப்பாக்கங்களை பதிவுத் தபால் மற்றும் மின்னஞ்சல் மூலம் அனுப்ப முடியும் என்பதுடன், சில போட்டிகளுக்கான படைப்பாக்கங்களை மின்னஞ்சல் மூலம் மாத்திரமே அனுப்ப முடியும்.

அனைத்துப் போட்டிகளுக்கும் பின்வரும் பொதுவான நிபந்தனைகள் ஏற்புடையதாகும் என்பதுடன், அதற்கு மேலதிகமாக ஒவ்வொரு போட்டிக்கும் உரிய போட்டி நிபந்தனைகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தி படைப்பாக்கங்களை அனுப்ப வேண்டும். குறித்த நிபந்தனைகளுக்கு அமையாத படைப்பாக்கங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

பொதுவான நிபந்தனைகள்

1. படைப்பாக்கங்களை சமர்ப்பிக்கும் அனைத்துப் பாடசாலை மாணவர்களும் சம்பந்தப்பட்ட பாடசாலையின் மாணவராக இருப்பது கட்டாயமானதாகும். (படைப்பாக்கத்துடன் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவம் சான்றுபடுத்தப்படும் திகதியில், அவர் அந்தப் பாடசாலையில் கல்வி கற்பவராக இருக்க வேண்டும்.)

2. அனைத்து படைப்பாக்கங்களும், அந்தந்தப் போட்டிகளுக்குரிய பின்வரும் விண்ணப்பப்படிவ மாதிரியுடன் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். உரிய விண்ணப்பப்படிவம் பாடசாலை அதிபரினால் அவரது கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரையுடன் பரிந்துரைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவத்தில் உள்ள அனைத்து விபரங்களும் சரியாகவும் தெளிவாகவும் குறிப்பிடப்பட வேண்டும் என்பதுடன் வெற்றியாளர்களுக்கான சான்றிதழ்கள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களின்படி மாத்திரமே பதிப்பிடப்படும். முழுமையற்ற மற்றும் தெளிவற்ற விபரங்களைக் கொண்ட விண்ணப்பப்படிவங்களுடன் சமர்ப்பிக்கப்படும் படைப்பாக்கங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

3. அந்தந்தப் போட்டிகளுக்குரிய மாதிரியின்படி தயாரிக்கப்படாத விண்ணப்பப்படிவங்கள் அல்லது விண்ணப்பப்படிவங்கள் இன்றி சமர்ப்பிக்கப்படும் படைப்பாக்கங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

4. க.பொ.த சாதாரண தரம் / உயர் தரம் முடிவடைந்ததன் காரணமாக அல்லது வேறு காரணங்களினால் பாடசாலையை விட்டு விலகிய பிள்ளைகளின் படைப்பாக்கங்களை கொண்ட விண்ணப்பப்படிவங்களை பரிந்துரைக்காதிருக்க சம்பந்தப்பட்ட அதிபர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அவ்வாறு பாடசாலையை விட்டு விலகிய பிள்ளைகளின் ஆக்கங்களுக்கு ஏதேனும் வெற்றி கிடைத்தால், அவ்வெற்றி இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், ஏதேனும் ஒரு படைப்பாக்கம் பாடசாலையை விட்டு விலகிய பிள்ளையுடையது என உறுதி செய்யப்பட்டால், அந்த படைப்பாக்கம் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

5. அந்தந்தப் போட்டிகளுக்குரிய போட்டி நிபந்தனைகளுக்கு அமையாத படைப்பாக்கங்களும் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

6. உரிய ஆக்கங்கள் A4 அளவிளான தாள்களில் (தனி பக்கத்தில் மாத்திரம்) தெளிவான கையெழுத்தில் அல்லது கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும், அனைத்துப் பக்கங்களும் இலக்கமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கணினியில் தட்டச்சு செய்து சமர்ப்பிப்பதாக இருந்தால், பின்வருமாறு தட்டச்சு செய்யப்பட வேண்டும்:

   எழுத்து அளவு : 12

   வரி இடைவெளி : 1.5

   பக்க எல்லைகள் : மேல் - 1அங்குலம், கீழ்- 1அங்குலம், இடது -1.5 அங்குலம், வலது - 1 அங்குலம்

   எழுத்து நிறம் : கறுப்பு

   எழுத்து வகை : சிங்களம் - Iskoola Potha, தமிழ்- Baamini, ஆங்கிலம் - Times New Roman

8. போட்டிகளுக்காக சமர்ப்பிக்கப்படும் படைப்பாக்கங்கள், அதற்குரிய விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்கும் மாணவர்களினாலேயே உருவாக்கப்பட்ட சொந்த படைப்பாக்கங்களாக இருத்தல் வேண்டும்.

9. ஒரு மாணவர் எத்தனை போட்டிகளுக்கு வேண்டுமானாலும் படைப்பாக்கங்களை சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் பங்குபற்றும் அனைத்துப் போட்டிகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்பட வேண்டும். ஒரு போட்டிக்கு ஒரு விண்ணப்பதாரர் அதிகபட்சமாக 02 படைப்பாக்கங்களை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

10. பதிவுத் தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் வழியாக படைப்பாக்கங்கள் மற்றும் விண்ணப்பப்படிவங்களை அனுப்ப முடியும். பதிவுத் தபாலில் படைப்பாக்கங்கள் மற்றும் விண்ணப்பப்படிவங்களை அனுப்புவதாயின்,

    அரசாங்க தகவல் திணைக்களம்,
    இல. 163,
    பொல்ஹேன்கொட,
    கொழும்பு 05

என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். பதிவுத் தபாலில் படைப்பாக்கங்களை மற்றும் விண்ணப்பப்படிவங்களை அனுப்பும் போது கடித உறையின் மேல் இடதுபுற மூலையிலும், மின்னஞ்சல்

வழியாக படைப்பாக்கங்களை அனுப்பும் போது மின்னஞ்சலில் விடயம் (Subject) பகுதியிலும் சம்பந்தப்பட்ட போட்டி எது என்பது பின்வருமாறு தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்:

“அசிதிசி விதுமக பாடசாலை படைப்பாக்க போட்டித் தொடர் - <போட்டியின் பெயர்> - <கனிஷ்ட / சிரேஷ்ட / திறந்த பிரிவு> - <சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி >”

உதாரணம்: ஒரு மாணவர் சிரேஷ்ட பிரிவின் ஆங்கில மொழி மூல அறிவிப்பாளர் போட்டியில் பங்குபற்றுகிறார் எனின், அந்த மாணவர் தனது விண்ணப்பப்படிவம் மற்றும் காணொளியை அனுப்பும் மின்னஞ்சலின் விடயம் (Subject) பகுதியிலோ அல்லது கடித உறையின் மேல் இடதுபுற மூலையிலோ சம்பந்தப்பட்ட போட்டியை பின்வருமாறு குறிப்பிட வேண்டும்:

“அசிதிசி விதுமக பாடசாலை படைப்பாக்க போட்டித் தொடர் - அறிவிப்பாளர் போட்டி - சிரேஷ்ட பிரிவு - ஆங்கில மொழி”

11. நிபுணத்துவம் வாய்ந்த நடுவர் குழுவொன்றினால் படைப்பாக்கங்கள் பரிசீலிக்கப்படும் என்பதுடன், நடுவர் குழுவின் முடிவே இறுதியான முடிவாகும். சமர்ப்பிக்கப்பட்ட படைப்பாக்கங்களின் சுயாதீனத்தன்மை மற்றும் உரிமைத்தன்மை தவிர, நடுவர் குழுவின் முடிவுகளை மறுபரிசீலனை செய்யக் கோரும் எந்தவொரு கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. படைப்பாக்கங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2026 ஒக்டோபர் 15 ஆகும் என்பதுடன் தாமதித்து கிடைக்கும் ஆக்கங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

போட்டி பட்டியல்

தொ.இல	போட்டி		வயது பிரிவு	மொழி	போட்டி இல
1	சிறுகதை போட்டி		கனிஷ்ட	சிங்களம்	1
				தமிழ்	2
				ஆங்கிலம்	3
			சிரேஷ்ட	சிங்களம்	4
				தமிழ்	5
				ஆங்கிலம்	6
2	திரைக்கதை		கனிஷ்ட	சிங்களம்	7
				தமிழ்	8
				ஆங்கிலம்	9
			சிரேஷ்ட	சிங்களம்	10
				தமிழ்	11
				ஆங்கிலம்	12
3	புகைப்பட போட்டி		கனிஷ்ட	ஏற்புடையதல்ல	13
			சிரேஷ்ட	ஏற்புடையதல்ல	14
4	அறிவிப்பாளர் போட்டி		கனிஷ்ட	சிங்களம்	15
				தமிழ்	16
				ஆங்கிலம்	17
			சிரேஷ்ட	சிங்களம்	18
				தமிழ்	19
				ஆங்கிலம்	20
5	குறுந்திரைப்பட போட்டி	சிறந்த தயாரிப்பு	கனிஷ்ட	ஏற்புடையதல்ல	21
		சிறந்த இயக்கம்		ஏற்புடையதல்ல	22
		சிறந்த நடிப்பு		ஏற்புடையதல்ல	23
		சிறந்த படப்பிடிப்பு		ஏற்புடையதல்ல	24
		சிறந்த இசை மற்றும் ஒலியாக்கம்		ஏற்புடையதல்ல	25
		சிறந்த தயாரிப்பு	சிரேஷ்ட	ஏற்புடையதல்ல	26
		சிறந்த இயக்கம்		ஏற்புடையதல்ல	27
		சிறந்த நடிப்பு		ஏற்புடையதல்ல	28
		சிறந்த படப்பிடிப்பு		ஏற்புடையதல்ல	29
		சிறந்த இசை மற்றும் ஒலியாக்கம்		ஏற்புடையதல்ல	30
6	சிறந்த பாடசாலை ஊடக சஞ்சிகை		திறந்த	ஏற்புடையதல்ல	31
7	சிறந்த பாடசாலை ஊடக வானொலி சேவை		திறந்த	ஏற்புடையதல்ல	32
8	சிறந்த பாடசாலை Facebook பக்கம்		திறந்த	ஏற்புடையதல்ல	33
9	சிறந்த பாடசாலை YouTube அலைவரிசை		திறந்த	ஏற்புடையதல்ல	34
10	சிறந்த ஆய்வு கட்டுரை		ஆசிரியர்களுக்காக	ஏற்புடையதல்ல	35

போட்டி நிபந்தனைகள்

1. சிறுகதைப் போட்டி

I. இப்போட்டியானது கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட வயதுப் பிரிவுகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

II. சிறுகதைக்கு விருப்பமான எந்தவொரு தொனிப்பொருளையும் (பொருளடக்கம்) அடிப்படையாகக் கொள்ள முடியும் என்பதுடன், அது அதிகபட்சம் 2500 சொற்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

III. போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் சிறுகதைகள் இதற்கு முன்னர் வேறு எந்தவொரு போட்டியிலும் சமர்ப்பிக்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும்.

IV. ஒரு போட்டியாளர் அதிகபட்சமாக 02 சிறுகதைகளை மாத்திரம் சமர்ப்பிக்க முடியும்.

V. சமர்ப்பிக்கப்படும் சிறுகதைக்கு அதன் தொனிப்பொருளுக்குப் பொருத்தமான அடையாளம் காணும் தலைப்பு இடப்பட வேண்டும்.

VI. போட்டித் தொடரின் பொதுவான நிபந்தனைகளுள் இலக்கம் 06, 07 மற்றும் 10 ஆகியன குறித்து விசேட கவனம் செலுத்தி படைப்பாக்கங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

VII. ஒரு சாதாரண சிறுகதையில் காணப்படும் அடிப்படை குணாதிசயங்கள் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும்.

VIII. போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் சிறுகதைகள் சம்பந்தப்பட்ட போட்டியாளரின் சொந்த படைப்பாக்கமாக இருத்தல் வேண்டும். போட்டியின் முடிவுகள் வெளியான பின்னரேனும், ஏதேனும் ஒரு சிறுகதை சம்பந்தப்பட்ட போட்டியாளரின படைப்பாக்கம் அல்ல என்பது உறுதி செய்யப்பட்டால், அவ்வெற்றி இரத்து செய்யப்படும்.

IX. படைப்பாக்கத்துடன் “மாதிரி 01” இற்கு ஏற்ப விண்ணப்பப்படிவத்தை இணைத்து அனுப்புவது கட்டாயமாகும்.

X. போட்டித் தொடரின் ஏனைய அனைத்துப் பொதுவான நிபந்தனைகளும் அவ்வாறே ஏற்புடையது.

XI. மின்னஞ்சல் வழியாக படைப்பாக்கங்களை அனுப்புவதாயின் publicationcolombo@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

2. திரைக்கதைப் போட்டி

I. இப்போட்டியானது கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட வயதுப் பிரிவுகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

II. திரைக்கதைக்கு விருப்பமான எந்தவொரு தொனிப்பொருளையும் (பொருளடக்கம்) அடிப்படையாகக் கொள்ள முடியும்.

III. இது 10 முதல் 15 நிமிடங்களை கொண்ட ஒரு குறும்படத்திற்காக எழுதப்பட்ட திரைக்கதையாக இருத்தல் வேண்டும். ஆவணப்படங்களுக்கான திரைக்கதையாக அல்லாமல், கதை அம்சம் கொண்ட குறும்படத்திற்குப் பொருத்தமான திரைக்கதையாக அமைதல் வேண்டும்.

IV. இப்போட்டித் தொடரின் குறும்படப் போட்டிக்காக சமர்ப்பிக்கப்படும் குறும்படங்களின் திரைக்கதைகளை இப்போட்டிக்கும் சமர்ப்பிப்பதில் எவ்வித தடையுமில்லை.

V. கதைக்களம் மாத்திரமன்றி, ஒரு திரைக்கதையில் இருக்க வேண்டிய அடிப்படை கூறுகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். எனவே, திரைக்கதை மற்றும் குறும்படப் போட்டிகளுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்கள் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டும்.

VI. ஒரு போட்டியாளர் அதிகபட்சமாக 02 திரைக்கதைகளை மாத்திரம் சமர்ப்பிக்க முடியும்.

VII. போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் திரைக்கதைகள் இதற்கு முன்னர் வேறு எந்தவொரு போட்டியிலும் சமர்ப்பிக்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும்.

VIII. சமர்ப்பிக்கப்படும் திரைக்கதைக்கு அதன் தொனிப்பொருளுக்குப் பொருத்தமான அடையாளங்காணும் பெயர் இடப்பட வேண்டும்.

IX. போட்டித் தொடரின் பொதுவான நிபந்தனைகளுள் இலக்கம் 06, 07 மற்றும் 10 ஆகியன குறித்து விசேட கவனம் செலுத்தி படைப்பாக்கங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

X. போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் திரைக்கதைகள் சம்பந்தப்பட்ட போட்டியாளரின் சொந்த படைப்பாக்கமாக இருத்தல் வேண்டும். போட்டியின் முடிவுகள் வெளியான பின்னரேனும், ஏதேனும் ஒரு திரைக்கதை சம்பந்தப்பட்ட போட்டியாளரின் படைப்பாக்கம் அல்ல என்பது உறுதி செய்யப்பட்டால், அவ்வெற்றி இரத்து செய்யப்படும்.

XI. படைப்பாக்கத்தடன் “மாதிரி 01” இற்கு ஏற்ற விண்ணப்பப்படிவத்தை இணைத்து அனுப்புவது கட்டாயமாகும்.

XII. போட்டித் தொடரின் ஏனைய அனைத்துப் பொதுவான நிபந்தனைகளும் அவ்வாறே ஏற்புடையதாகும்.

XIII. மின்னஞ்சல் வழியாக ஆக்கங்களை அனுப்புவதாயின் dgiscriptcompet@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

3. புகைப்படப் போட்டி

I. இப்போட்டியானது கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட வயதுப் பிரிவுகளில் மொழியை கருத்திற்கொள்ளாது திறந்த முறையில் நடாத்தப்படும்.

II. பின்வரும் கருப்பொருள்களின் கீழ் புகைப்படங்களைச் சமர்ப்பிக்க முடியும்:
- சூழல் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றம்
- அமைதி, சகவாழ்வு மற்றும் இலங்கையின் அடையாளம்
- நீர் வளம் மற்றும் அதன் முக்கியத்துவம்
- விளையாட்டுத் திறன்கள் மற்றும் இளமை துடிப்புள்ள
- நகரமயமாக்கல் மற்றும் அதன் தாக்கம்

III. அனைத்துப் புகைப்படங்களும் 10 x 12 அங்குல அளவில் வர்ணம் அல்லது கறுப்பு-வெள்ளையில் அச்சிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையெனில், அதே அளவில் வர்ணம் அல்லது கறுப்பு-வெள்ளையாக மின்னஞ்சல் மூலமும் அனுப்பலாம்.

IV. போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்கள் சம்பந்தப்பட்ட போட்டியாளரால் மாத்திரமே எடுக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். போட்டியின் முடிவுகள் வெளியான பின்னரேனும், ஏதேனும் ஒரு புகைப்படம் சம்பந்தப்பட்ட போட்டியாளரால் எடுக்கப்பட்டது அல்ல என்பது உறுதி செய்யப்பட்டால், அவ்வெற்றி இரத்து செய்யப்படும்.

V. போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்கள் இதற்கு முன்னர் வேறு எந்தவொரு போட்டியிலும் சமர்ப்பிக்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும்.

VI. ஒரு போட்டியாளர் அதிகபட்சமாக 02 புகைப்படங்களை மாத்திரம் சமர்ப்பிக்க முடியும்.

VII. சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்களுக்கு அதன் தொனிப்பொருளுக்குப் பொருத்தமான அடையாளம் காணும் தலைப்பு இடப்பட வேண்டும்.

VIII. தொழில்முறை கமெராக்கள் மட்டுமன்றி, ஸ்மார்ட்போன்கள் (Smartphones) மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் போட்டிக்குச் சமர்ப்பிக்க முடியும்.

IX. பதிவுத் தபாலில் புகைப்படங்களை அனுப்புவதாயின் புகைப்படத்தின் பின்புறத்திலும், மின்னஞ்சல் மூலம் புகைப்படங்களை அனுப்புவதாயின் புகைப்படம் இணைக்கப்படும் மின்னஞ்சல் செய்தியினுள்ளும் பின்வரும் விபரங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்: (போட்டியாளரின் முழுப் பெயர், பாடசாலையின் பெயர் மற்றும் முகவரி, போட்டியிடும் பிரிவு: கனிஷ்ட/ சிரேஷ்ட, புகைப்படத்தின் தொனிப்பொருள், புகைப்படத்திற்கான தலைப்பு, போட்டியாளரைத் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம்).

X. படைப்பாக்கத்துடன் “மாதிரி 01” இற்கு ஏற்ப விண்ணப்பப்படிவத்தை இணைத்து அனுப்புவது கட்டாயமாகும்.

XI. போட்டித் தொடரின் ஏனைய அனைத்துப் பொதுவான நிபந்தனைகளும் அவ்வாறே ஏற்புடையதாகும்.

XII. மின்னஞ்சல் வழியாக ஆக்கங்களை அனுப்புவதாயின் govphotonews.ex@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

4. அறிவிப்பாளர் போட்டி

I. இப்போட்டியானது கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட வயதுப் பிரிவுகளில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

II. போட்டியாளர்கள் தமது முன்வைப்பை வீடியோ செய்து மின்னஞ்சல் வழியாக அனுப்ப வேண்டும்.

III. வீடியோவின் உயர்ந்தபட்சம் காலம் 06 நிமிடங்களாக இருத்தல் வேண்டும். ஒரு வீடியோவில் உயர்ந்தபட்சம் 03 நிமிடங்கள் வரையான செய்தி முன்வைப்பு மற்றும் உயர்ந்தபட்சம 03 நிமிடங்கள் வரையான ஆவணரீதியிலான அல்லது விசேட அம்ச நிகழ்ச்சித் தொகுப்பு என்பன உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

IV. வீடியோவின் காட்சிகளும் குரலும் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன், வீடியோவின் ஆரம்பத்தில் போட்டியாளரின் பெயர், போட்டியிடும் வயதுப் பிரிவு மற்றும் பாடசாலையின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

V. வீடியோவில் உள்ள இரண்டு உள்ளடக்கங்களும் ஒரே தடவையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், எக்காரணம் கொண்டும் இடையில் செம்மையாக்கம் செய்யப்படக் கூடாது.

VI. வீடியோவில் உள்ள இரண்டு உள்ளடக்கங்களையும் சம்பந்தப்பட்ட போட்டியாளரே முன்வைக்க வேண்டும் என்பதுடன், வேறு வழிகளில் dubbing செய்யப்படக் கூடாது.

VII. வீடியோக்கள் MP4 அல்லது MOV வடிவத்தில் அனுப்பப்பட வேண்டும்.

VIII. ஆக்கங்களை முன்வைக்கும் போது, சொற்களை உச்சரித்தல், குரல் கட்டுப்பாடு, மொழிப் பயன்பாடு, முன்வைக்கும் பாங்கு, நம்பகத்தன்மை, ஆக்கத்திறன், நேர முகாமை, பார்வையாளர்களைக் கவர்தல் மற்றும் உள்ளடக்கத்தின் ஒழுங்கமைப்பு ஆகியன குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

IX. ஒரு போட்டியாளர் ஒரு வீடியோவை மாத்திரம் சமர்ப்பிக்க முடியும்.

X. வீடியோவுடன் “மாதிரி 01” இற்கு ஏற்ப விண்ணப்பப்படிவத்தை இணைத்து அனுப்புவது கட்டாயமாகும்.

XI. இறுதிச் சுற்றுக்குத் தெரிவு செய்யப்படும் போட்டியாளர்கள், முன்னோக்கிய தினத்தில் அறிவிக்கப்படும் ஒரு இடத்திற்கு அழைக்கப்பட்டு நேரடிப் போட்டி நடாத்தப்படும்.

XII. போட்டித் தொடரின் ஏனைய அனைத்துப் பொதுவான நிபந்தனைகளும் அவ்வாறே ஏற்புடையதாகும்.

XIII. வீடியோக்களை dgi.announcing@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு மாத்திரமே அனுப்ப வேண்டும்.

5. குறும்படப் போட்டி

I. இப்போட்டியானது கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட வயதுப் பிரிவுகளில் மொழியை கருத்திற்கொள்ளாது திறந்த முறையில் நடாத்தப்படும்.

II. தொழில்முறை கெமராக்கள் மட்டுமன்றி, ஸ்மார்ட்போன்கள் (Smartphones) மூலம் பதிவு செய்யப்பட்ட குறும்படங்களையும் போட்டிக்குச் சமர்ப்பிக்க முடியும்.

III. பாடசாலை சமூகத்திற்குப் பொருத்தமான எந்தவொரு தொனிப்பொருளின் கீழும் குறும்படங்களை உருவாக்க முடியும்.

IV. சமர்ப்பிக்கப்படும் குறும்படத்திற்கு அதன் தொனிப்பொருளுக்குப் பொருத்தமான அடையாளம் காணும் பெயர் இடப்பட வேண்டும்.

V. இது பாடசாலை மட்டத்திலான போட்டி என்பதால், ஒரு பாடசாலையிலிருந்து ஒரு வயதுப் பிரிவிற்காக இரண்டு குறும்படங்களை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும்.

VI. போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் குறும்படங்கள் இதற்கு முன்னர் வேறு எந்தவொரு போட்டியிலும் சமர்ப்பிக்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும்.

VII. 10 முதல் 15 நிமிட இடைவெளியைக் கொண்ட குறும்படமாக இருத்தல் வேண்டும்.

VIII. கதைக்களம் மாத்திரமன்றி, ஒரு குறும்படத்தில் இருக்க வேண்டிய அடிப்படை கூறுகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். எனவே, திரைக்கதை மற்றும் குறும்படப் போட்டிகளுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களை விசேடமாக கவனிக்க வேண்டும்.

IX. தொழிநுட்பப் பணிகளுக்காக ஆசிரியர்களின் ஒத்துழைப்பையும் வழிகாட்டலையும் பெற முடியும் என்றாலும், குறும்படத்தின் முழுமையான தயாரிப்பு சார்ந்த அனைத்தும் பாடசாலை மாணவர்களினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

X. போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் குறும்படங்கள் சம்பந்தப்பட்ட போட்டியாளர்களினாலேயே எடுக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். போட்டியின் முடிவுகள் வெளியான பின்னரேனும், குறும்பட போட்டியாளர்களால் எடுக்கப்பட்ட குறும்படமானது அவர்களுடையது அல்ல என்பது உறுதி செய்யப்பட்டால், அவ்வெற்றி இரத்து செய்யப்படும்.

XI. குறும்படங்கள் MP4 அல்லது MOV வடிவத்தில் அனுப்பப்பட வேண்டும்.

XII. சமர்ப்பிக்கப்படும் அனைத்துக் குறும்படங்களும் சிறந்த தயாரிப்பு, சிறந்த இயக்கம், சிறந்த நடிப்பு, சிறந்த கெமரா இயக்கம், சிறந்த ஒலி மற்றும் இசை வடிவமைப்பு ஆகிய விருதுகளுக்காக பரிசீலிக்கப்படும்.

XIII. படைப்பாக்கங்கத்துடன் “மாதிரி 01” இற்கு ஏற்ப விண்ணப்பப்படிவத்தை இணைத்து அனுப்புவது கட்டாயமாகும்.

XIV. போட்டித் தொடரின் ஏனைய அனைத்துப் பொதுவான நிபந்தனைகளும் அவ்வாறே ஏற்புடையதாகும்.

XV. மின்னஞ்சல் வழியாக ஆக்கங்களை அனுப்புவதாயின், editgfu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

6. சிறந்த பாடசாலை ஊடக சஞ்சிகை

I. இப்போட்டியானது வயதுப் பிரிவுகள் அல்லது மொழியை கருத்திற்கொள்ளாது திறந்த முறையில் நடாத்தப்படும்.

II. சஞ்சிகை A4 அளவுப் பக்கங்களில் தயாரிக்கப்பட வேண்டும்.

III. சஞ்சிகையின் அட்டைப் பக்கம் வர்ணமாக இருக்க வேண்டும் என்பதுடன், உள் பக்கங்கள் வர்ணம், கறுப்பு-வெள்ளை அல்லது கலவையாக இருக்கலாம்.

IV. பக்கங்களின் எண்ணிக்கை 20 - 30 க்கு இடைப்பட்டதாக இருக்க வேண்டும்.

V. சஞ்சிகைக்குப் பொருத்தமான வகையில் வெவ்வேறு அளவிலான எழுத்து வகைகளை பயன்படுத்த முடியும்.

VI. சஞ்சிகையை அச்சிடப்பட்ட அல்லது இலத்திரனியல் சஞ்சிகையாக (E-Magazine) உருவாக்க முடியும்.

VII. சஞ்சிகைக்காக அதற்கு பொருத்தமான அடையாளம் காணும் பெயர் இடப்படல் வேண்டும்.

VIII. சஞ்சிகையில் உள்ளடக்கப்படும் கட்டுரைகள் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களாக அல்லது கட்டுரைகளாக இருத்தல் வேண்டும்.

IX. பாடசாலை சமூகத்தின் பயன்பாட்டிற்குப் பொருத்தமான வகையில் பொருளாதாரம், அரசியல், கலை, இலக்கியம், அறிவியல், விளையாட்டு, சர்வதேச தகவல்கள் போன்ற எந்தவொரு துறை சார்ந்த கட்டுரைகள், புகைப்படங்கள், ஓவியங்கள், கார்ட்டூன்கள், வரைபடங்கள், புதிர்கள் மற்றும் வரைபுகள் போன்றவற்றை சஞ்சிகையில் உள்ளடக்க முடியும்.

X. சஞ்சிகையின் எந்தவொரு வெளியீடும் பிறிதொரு ஆக்கத்தின் பதிப்புரிமையை மீறுவதாகவோ அல்லது திருடப்பட்டதாகவோ இருத்தல் கூடாது.

XI. சஞ்சிகையில் வெளியிடப்படும் உள்ளடக்கங்கள் / ஆக்கங்களில் உள்ள தகவல்கள் சரியானவையாக இருத்தல் வேண்டும்.

XII. சஞ்சிகையில் வெளியிடப்படும் உள்ளடக்கங்கள் / ஆக்கங்களில் வெறுப்புப் பேச்சுக்கள் அல்லது அவதூறான / ஒழுங்கீனமான மொழிப் பயன்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

XIII. சஞ்சிகையில் வெளியிடப்படும் உள்ளடக்கங்கள் / ஆக்கங்களில் இனம், இனக்குழு, மதம், பால்நிலை, இயலாமைக்குட்பட்டவர்கள் அல்லது ஏனைய குணவியல்புகளை அடிப்படையாகக் கொண்ட பாகுபாடுகள் எவையும் உள்ளடக்கப்படக் கூடாது. கலாசார மற்றும் மதப் பன்முகத்தன்மைக்கு மதிப்பளிக்க வேண்டும்.

XIV. சஞ்சிகையில் வெளியிடப்படும் உள்ளடக்கங்கள் / ஆக்கங்களில் வன்முறையைத் தூண்டும் அல்லது பாடசாலை சமூகத்திற்குப் பொருத்தமற்ற எவையும் இருக்கக் கூடாது.

XV. கலாசார ரீதியாக உணர்வுபூர்வமானதாகவும், அனைவரையும் உள்ளடக்கியதாகவும் (Inclusive) இருக்க வேண்டும்.

XVI. சஞ்சிகையின் மொழி நடைக்கு பேச்சு, எழுத்து அல்லது கலப்பு நடைகளைப் பயன்படுத்த முடியும் என்பதுடன், கட்டுரைகளின் எழுத்துப்பிழை, இலக்கணப் பிழைகள், சொல் பிரிப்பு போன்றன குறித்து கவனமாக இருத்தல் வேண்டும்.

XVII. ஒரு சாதாரண சஞ்சிகையில் காணப்படும் அடிப்படை வடிவமைப்பு அம்சங்கள் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும்.

XVIII. ஒரே சஞ்சிகையில் பல மொழிகளைப் பயன்படுத்தி கட்டுரைகளையும் ஆக்கங்களையும் உள்ளடக்கக் கூடாது.

XIX. இது பாடசாலை மட்டத்திலான போட்டியாகையால் ஒரு பாடசாலையிலிருந்து ஒரு வயது பிரிவிற்காக இரண்டு சஞ்சிகைகளையே முன்வைக்க முடியும்.

XX. படைப்பாக்கத்துடன் “மாதிரி 02” இற்கு ஏற்ப படியான விண்ணப்பப் படிவத்தை இணைத்து அனுப்புவது கட்டாயமாகும்.

XXI. போட்டித் தொடரின் ஏனைய அனைத்துப் பொதுவான நிபந்தனைகளும் அவ்வாறே ஏற்புடையதாகும்.

XXII. மின்னஞ்சல் வழியாக படைப்பாக்கங்களை அனுப்புவதாயின், desathiya.editor@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

7. சிறந்த பாடசாலை ஊடக வானொலிச் சேவை

I. இப்போட்டியானது வயதுப் பிரிவுகள் அல்லது மொழியை கருத்திற்கொள்ளாது திறந்த முறையில் நடாத்தப்படும்.

II. எனவே, போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் வானொலிச் சேவை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் செயற்படுவது போட்டிக்குச் சமர்ப்பிப்பதற்கு எவ்வித தடையுமில்லை.

III. போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் வானொலிச் சேவையானது ஒரு பாடசாலையினால் நடாத்தப்படும் வானொலிச் சேவையாக இருத்தல் வேண்டும்.

IV. விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் திகதிக்கு குறைந்தபட்சம் 06 மாதங்களுக்கு முன்பிருந்தாவது போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் வானொலிச் சேவையாக அது தொடர்ச்சியாகச் செயற்பட்டிருக்க வேண்டும்.

V. போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் வானொலிச் சேவையில் நிகழ்ச்சிகளை வழங்கும் அனைவரும் சம்பந்தப்பட்ட பாடசாலையின் மாணவர்களாக இருப்பது கட்டாயமாகும்.

VI. தொழிநுட்பப் பணிகளுக்காக ஆசிரியர்கள் மற்றும் ஏனைய வெளித் தரப்பினரின் ஒத்துழைப்பையும் வழிகாட்டலையும் பெற முடியும் என்றாலும், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குதல், அந்நிகழ்ச்சிகளுக்கான உள்ளடக்கங்களை உருவாக்குதல், திரைக்கதை எழுதுதல் போன்ற அனைத்தும் பாடசாலை மாணவர்களினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

VII. ஒரு சாதாரண வானொலிச் சேவையில் காணப்படும் அடிப்படை வடிவமைப்பு அம்சங்கள் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும்.

VIII. பாடசாலை சமூகத்தின் பயன்பாட்டிற்குப் பொருத்தமான வகையில் பொருளாதாரம், அரசியல், கலை, இலக்கியம், அறிவியல், விளையாட்டு, சர்வதேச தகவல்கள் போன்ற எந்தவொரு துறை சார்ந்த தகவல்களை உள்ளடக்கிய நிகழ்ச்சிகளையும் இவ்வானொலிச் சேவை மூலம் ஒளிபரப்ப முடியும்.

IX. வானொலிச் சேவை மூலம் வெளியிடப்படும் உள்ளடக்கங்கள் / படைப்பாக்கங்களில் உள்ள தகவல்கள் சரியானவையாகவும் இருத்தல் வேண்டும்.

X. வானொலிச் சேவை மூலம் வெளியிடப்படும் உள்ளடக்கங்கள் / படைப்பாக்கங்கள் பாடசாலை சமூகத்திற்குப் பொருத்தமான விடயங்களை கொண்டதாக இருத்தல் வேண்டும்.

XI. வானொலிச் சேவை மூலம் வெளியிடப்படும் உள்ளடக்கங்கள் / படைப்பாக்கங்களின் குரல், ஒலி, இசை போன்றன தெளிவாக பதிவு செய்யப்பட்டு ஒடியோ பதிவாக அனுப்ப வேண்டும். முழுமையாக ஒரு வாரகாலத்திற்குரிய பல்வேறு வகையை சேர்ந்த நிகழ்ச்சிகள் உள்ளடங்கும் வகையில் உயர்ந்தபட்சமாக பத்து (10) நிகழ்ச்சிகள் அதன்

உள்ளடக்கங்களாக இருக்க வேண்டும். குறித்த நிகழ்ச்சிகளுக்குரிய தயாரிப்பு குழுக்களின் தகவல்கள் நிகழ்ச்சிகளுக்கேற்ப வெவ்வேறாக முன்வைக்க வேண்டும்.

XII. வானொலிச் சேவை மூலம் வெளியிடப்படும் உள்ளடக்கங்கள் / படைப்பாக்கங்களில் வெறுப்புப் பேச்சுக்கள் அல்லது அவதூறான / ஒழுங்கீனமான மொழிப் பயன்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

XIII. வானொலிச் சேவை மூலம் வெளியிடப்படும் உள்ளடக்கங்கள் / படைப்பாக்கங்களில் இனம், இனக்குழு, மதம், பால்நிலை, இயலாமைக்குட்பட்டவர்கள் அல்லது ஏனைய குணவியல்புகளை அடிப்படையாகக் கொண்ட பாகுபாடுகள் எவையும் உள்ளடக்கப்படக் கூடாது. கலாசார மற்றும் மதப் பன்முகத்தன்மைக்கு மதிப்பளிக்க வேண்டும்.

XIV. வானொலிச் சேவை மூலம் வெளியிடப்படும் உள்ளடக்கங்கள் / படைப்பாக்கங்களில் வன்முறையைத் தூண்டும் அல்லது பாடசாலை சமூகத்திற்குப் பொருத்தமற்ற எவையும் இருக்கக் கூடாது. கலாசார ரீதியாக உணர்வுபூர்வமானதாகவும் அனைவரையும் உள்ளடக்கியதாகவும் (Inclusive) இருக்க வேண்டும்.

XV. ஒரு பாடசாலையிலிருந்து வானொலி சேவை ஒன்றைவிட செயற்படுத்தப்படுமாயின் குறித்த பாடசாலைக்கு குறித்த வானொலி சேவை பலவற்றையும் இப்போட்டிக்கு முன்வைக்க முடியும். இருப்பினும் அந்த ஒவ்வொரு வானொலி சேவைக்காக வெவ்வேறு விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

XVI. இப்போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகள் “படிவம் 02” இற்க ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை schoolradio26@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். (இப்போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை மின்னஞ்சல் வழியாக மாத்திரமே அனுப்ப முடியும்.)

XVII. போட்டித் தொடரின் ஏனைய அனைத்துப் பொதுவான நிபந்தனைகளும் அவ்வாறே ஏற்புடையதாகும்.

8. சிறந்த பாடசாலை Facebook பக்கம்

I. இப்போட்டியானது வயதுப் பிரிவுகள் அல்லது மொழிகளை கருத்திற்கொள்ளாது திறந்த முறையில் நடாத்தப்படும்.

II. போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் Facebook பக்கம் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் செயற்படுவது போட்டிக்குச் சமர்ப்பிப்பதற்கு எவ்வித தடையுமில்லை.

III. விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் திகதிக்கு குறைந்தபட்சம் 06 மாதங்களுக்கு முன்பிருந்தாவது, போட்டிக்காக முன்வைக்கப்படும் Facebook பக்கம், Facebook பக்கமாக தொடர்ச்சியாகவும் கிரமமாகவும் இற்றைப்படுத்தப்பட்டு (Updated) செய்யப்பட்டிருக்க வேண்டும்.

IV. போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் Facebook பக்கமானது பாடசாலை அதிபரின் அனுமதி மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் செயற்படும் சம்பந்தப்பட்ட பாடசாலையின் உத்தியோகபூர்வ Facebook பக்கமாக அல்லது அந்தப் பாடசாலையின் விளையாட்டுக் குழு, மாணவர் சங்கம் போன்றவற்றின் உத்தியோகபூர்வ பக்கமாக இருத்தல் வேண்டும். (பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் போன்றன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

V. தொழிநுட்பப் பணிகளுக்காக ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் ஏனைய வெளித் தரப்பினரின் ஒத்துழைப்பையும் வழிகாட்டலையும் பெற முடியும் என்றாலும், Facebook பக்கத்தின் உள்ளடக்கங்களை உருவாக்குவது அனைத்தும் பாடசாலை மாணவர்களினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

VI. ஏனைய Facebook பக்கங்களின் பதிவுகளை நேரடியாகப் பகிர்வதற்குப் பதிலாக, தங்களுடைய உள்ளடக்க ஆக்கங்களைத் தாங்களாகவே உருவாக்கிப் பதிவிட வேண்டும்.

VII. Facebook பக்கத்தின் பதிவுகள் பிறிதொரு ஆக்கத்தின் பதிப்புரிமையை மீறுவதாகவோ அல்லது திருடப்பட்டதாகவோ இருத்தல் கூடாது.

VIII. பாடசாலை சமூகத்தின் பயன்பாட்டிற்குப் பொருத்தமான வகையில் பொருளாதாரம், அரசியல், கலை, இலக்கியம், அறிவியல், விளையாட்டு, சர்வதேச தகவல்கள் போன்ற எந்தவொரு துறை சார்ந்த கட்டுரைகள், புகைப்படங்கள், ஓவியங்கள், கார்ட்டூன்கள், வரைபடங்கள், புதிர்கள் மற்றும் வரைபுகள் போன்றவற்றை இப் Facebook பக்கத்தில் உள்ளடக்க முடியும்.

IX. Facebook பக்கத்தின் நோக்கத்துடன் தொடர்புடைய உள்ளடக்கங்களை மாத்திரம் கொண்டிருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

X. Facebook பக்கம் மூலம் வெளியிடப்படும் உள்ளடக்க ஆக்கங்களில் உள்ள தகவல்கள் சரியானவையாக இருத்தல் வேண்டும்.

XI. Facebook பக்கம் மூலம் வெளியிடப்படும் உள்ளடக்க ஆக்கங்கள் பாடசாலை சமூகத்திற்குப் பொருத்தமான விடயங்களை கொணடதாக இருத்தல் வேண்டும்.

XII. Facebook பக்கம் மூலம் வெளியிடப்படும் உள்ளடக்க ஆக்கங்களின் காட்சிகள், புகைப்படங்கள், ஒலிகள் போன்றன தெளிவான தரத்தில் இருக்க வேண்டும்.

XIII. Facebook பக்கம் மூலம் வெளியிடப்படும் உள்ளடக்க ஆக்கங்களில் வெறுப்புப் பேச்சுக்கள் அல்லது அவதூறான / ஒழுங்கீனமான மொழிப் பயன்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

XIV. Facebook பக்கம் மூலம் வெளியிடப்படும் உள்ளடக்க ஆக்கங்களில் இனம், இனக் குழு, மதம், பால்நிலை, இயலாமைக்குட்பட்டமை அல்லது ஏனைய குணவியல்புகளை அடிப்படையாகக் கொண்ட பாகுபாடுகள் எவையும் உள்ளடக்கப்படக் கூடாது. கலாசார மற்றும் மதப் பன்முகத்தன்மைக்கு மதிப்பளிக்க வேண்டும்.

XV. போட்டிக்காக முன்வைக்கப்படும் Facebook பக்கம் மூலம் வெளியிடப்படும் உள்ளடக்க ஆக்கங்களில் வன்முறையைத் தூண்டும் அல்லது பாடசாலை சமூகத்திற்குப் பொருத்தமற்ற எவையும் இருக்கக் கூடாது. கலாசார ரீதியாக உணர்வுப்பூர்வமானதாகவும் அனைவரையும் உள்ளடக்கியதாகவும் (Inclusive) இருக்க வேண்டும்.

XVI. Facebook பக்கத்தைப் பின்தொடருபவர்கள் கருத்துக்களைப் பதிவிடுவதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும் என்பதுடன், அவர்களின் கருத்துக்களுக்கு ஒழுக்கவிழுமியத்துடனான மற்றும் மரியாதையான முறையில் பதிலளிக்கப்பட்டிருப்பது குறித்து விசேட அவதானம் செலுத்தப்படும்.

XVII. ஏதேனும் ஒரு பாடசாலை facebook பக்கம் ஒன்றைவிட கூடுதலாக குறித்த போட்டிக்கு முன்வைப்பதாயின் அவ்வாறு முன்வைக்கும் ஒவ்வொரு Facebook பக்கத்திற்காகவும் வெவ்வேறாக விண்ணப்பப்படிவத்தினை அனுப்ப வேண்டும்.

XVIII. இப்போட்டியில் பங்குபற்றும் பாடசாலைகள் ”மாதிரி 02” இற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை srilankaonlineav@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். (இப்போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை மின்னஞ்சல் வழியாக மாத்திரமே அனுப்ப முடியும்.)

XIX. போட்டித் தொடரின் ஏனைய அனைத்துப் பொதுவான நிபந்தனைகளும் அவ்வாறே ஏற்புடையதாகும்.

9. சிறந்த பாடசாலை YouTube அலைவரிசை

I. இப்போட்டியானது வயதுப் பிரிவுகள் அல்லது மொழிகளை கருத்திற்கொள்ளாது திறந்த முறையில் நடாத்தப்படும்.

II. எனவே, அந்த YouTube அலைவரிசை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் செயற்படுவது போட்டிக்குச் சமர்ப்பிப்பதற்கு எவ்வித தடையுமில்லை.

III. விண்ணப்பப் படிவங்கள் கோரப்படும் திகதிக்கு குறைந்தபட்சம் 06 மாதங்களுக்கு முன்பிருந்தாவது, YouTube அலைவரிசையாக அது தொடர்ச்சியாகவும் கிரமமாகவும் இற்றைப்படுத்தப்பட்டு வந்திருக்க வேண்டும்.

IV. போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் YouTube அலைவரிசையானது பாடசாலை அதிபரின் அனுமதி மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டலின் கீழ் செயற்படும் சம்பந்தப்பட்ட பாடசாலையின் உத்தியோகபூர்வ YouTube அலைவரிசையாக அல்லது அந்தப் பாடசாலையின் விளையாட்டுக் குழு, மாணவர் சங்கம் போன்றவற்றின் உத்தியோகபூர்வ தளமாக இருத்தல் வேண்டும். (பழைய மாணவர் சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் போன்றன ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.)

V. தொழிநுட்பப் பணிகளுக்காக ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் ஏனைய வெளித் தரப்பினரின் ஒத்துழைப்பையும் வழிகாட்டலையும் பெற முடியும் என்றாலும், YouTube அலைவரிசை மூலம் வெளியிடப்படும் உள்ளடக்கங்களை உருவாக்குவது அனைத்தும் பாடசாலை மாணவர்களினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.

VI. ஏனைய YouTube அலைவரிசைகளின் பதிவுகளை நேரடியாகப் பதிவிடாமல், தங்களுடைய உள்ளடக்க ஆக்கங்களைத் தாங்களாகவே உருவாக்கிப் பதிவிட வேண்டும்.

VII. YouTube அலைவரிசையின் பதிவுகள் பிறிதொரு படைப்பாக்கத்தின் பதிப்புரிமையை மீறுவதாகவோ அல்லது திருடப்பட்டதாகவோ இருத்தல் கூடாது.

VIII. பாடசாலை சமூகத்தின் பயன்பாட்டிற்குப் பொருத்தமான வகையில் பொருளாதாரம், அரசியல், கலை, இலக்கியம், அறிவியல், விளையாட்டு, சர்வதேச தகவல்கள் போன்ற எந்தவொரு துறை சார்ந்த வீடியோக்களையும் இவ் YouTube அலைவரிசையில் உள்ளடக்க முடியும்.

IX. YouTube அலைவரிசையின் நோக்கத்துடன் தொடர்புடைய உள்ளடக்கங்களை மாத்திரம் கொண்டிருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

X. YouTube அலைவரிசை மூலம் வெளியிடப்படும் உள்ளடக்கங்கள் / படைப்பாக்கங்களில் உள்ள தகவல்கள் சரியானவையாக இருத்தல் வேண்டும்.

XI. YouTube அலைவரிசை மூலம் வெளியிடப்படும் உள்ளடக்கங்கள் / படைப்பாக்கங்கள் பாடசாலை சமூகத்திற்குப் பொருத்தமான விடயங்களை கொண்டதாக இருத்தல் வேண்டும்.

XII. YouTube அலைவரிசை மூலம் வெளியிடப்படும் உள்ளடக்கங்கள் / படைப்பாக்கங்களின் காட்சிகள் மற்றும் ஒலிகள் போன்றன தெளிவான தரத்தில் இருக்க வேண்டும்.

XIII. YouTube அலைவரிசை மூலம் வெளியிடப்படும் உள்ளடக்கங்கள் / படைப்பாக்கங்களில் வெறுப்புப் பேச்சுக்கள் அல்லது அவதூறான / ஒழுங்கீனமான மொழிப் பயன்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

XIV. YouTube அலைவரிசை மூலம் வெளியிடப்படும் உள்ளடக்கங்கள் / படைப்பாக்கங்களில் இனம், எத்தினிக் குழு, மதம், பால்நிலை, இயலாமைக்கட்பட்ட அல்லது ஏனைய குணவியல்புகளை அடிப்படையாகக் கொண்ட பாகுபாடுகள் எவையும் உள்ளடக்கப்படக் கூடாது. கலாசார மற்றும் மதப் பன்முகத்தன்மைக்கு மதிப்பளிக்க வேண்டும்.

XV. YouTube அலைவரிசை மூலம் வெளியிடப்படும் உள்ளடக்கங்கள் / படைப்பாக்கங்களில் வன்முறையைத் தூண்டும் அல்லது பாடசாலை சமூகத்திற்குப் பொருத்தமற்ற எவையும் இருக்கக் கூடாது. கலாசார ரீதியாக உணர்வுபூர்வமானதாகவும் அனைவரையும் உள்ளடக்கியதாகவும் (Inclusive) இருக்க வேண்டும்.

XVI. YouTube அலைவரிசையின் பங்களிப்பாளர்கள் / பார்வையாளர்கள் கருத்துக்களைப் பதிவிடுவதற்கான வாய்ப்பு இருக்க வேண்டும் என்பதுடன், அவர்களின் கருத்துக்களுக்கு ஒழுக்கவிழுமியத்துடனான மற்றும் மரியாதையான முறையில் பதிலளிக்கப்பட்டிருப்பது குறித்து விசேட அவதானம் செலுத்தப்படும்.

XVII. ஏதேனும் ஒரு பாடசாலை YouTube அலைவரிசை ஒன்றைவிட கூடுதலாக குறித்த போட்டிக்கு முன்வைப்பதாயின் அவ்வாறு முன்வைக்கும் ஒவ்வொரு YouTube அலைவரிசைக்காகவும் வெவ்வேறாக விண்ணப்பப்படிவத்தினை அனுப்ப வேண்டும்.

XVIII. போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும YouTube அலைவரிசை சார்பில், “மாதிரி 02” இற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை dgivideolk@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். (இப்போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை மின்னஞ்சல் வழியாக மாத்திரமே அனுப்ப முடியும்.)

XIX. போட்டித் தொடரின் ஏனைய அனைத்துப் பொதுவான நிபந்தனைகளும் அவ்வாறே விதியாகும்.

10. சிறந்த ஆய்வுக்கட்டுரை

I. இப்போட்டியானது அரச, பகுதியளவு அரச, தனியார் மற்றும் சர்வதேச பாடசாலை ஆசிரியர்களுக்காக மாத்திரம் மொழிகளை கருத்திற்கொள்ளாது திறந்த முறையில் நடாத்தப்படும்.

II. சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் ஆகிய எந்தவொரு மொழியிலும் ஆய்வுக்கட்டுரைகளைச் சமர்ப்பிக்க முடியும்.

III. "ஊடகக் கொள்கைகள், நவீன ஊடக சவால்கள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கலின் தாக்கம்" என்ற கருப்பொருளின் கீழ் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

IV. சொற்களின் எண்ணிக்கை 2500 க்குக் குறையாமலும் 3000 க்கு மிகையாகாமலும் இருத்தல் வேண்டும்.

V. உசாத்துணை நூற்பட்டியலைக் குறிப்பிடும் போது ஹார்வர்ட் பாணியைப் (Harvard Style) பின்பற்ற வேண்டும்.

VI. ஆய்வாளரின் பெயர், பதவி, பாடசாலை, மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி எண் ஆகியன தலைப்புக்குக் கீழே 10 எழுத்து அளவில் குறிப்பிடப்பட வேண்டும்.

VII. அனைத்து ஆய்வுக்கட்டுரைகளும் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, போட்டித் தொடரின் பொதுவான நிபந்தனைகளுள் இலக்கம் 06 மற்றும் 07 இல் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு இணங்க சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

VIII. போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக்கட்டுரை இதற்கு முன்னர் வேறு எந்தவொரு போட்டியிலும் சமர்ப்பிக்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும்.

IX. ஒரு போட்டியாளர் அதிகபட்சமாக 02 ஆய்வுக்கட்டுரைகளை மாத்திரம் சமர்ப்பிக்க முடியும்.

X. சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக்கட்டுரைக்கு அதன் தொனிப்பொருளுக்குப் பொருத்தமான அடையாளம் காணும் தலைப்பு இடப்பட வேண்டும்.

XI. ஒரு சாதாரண ஆய்வுக்கட்டுரையில் காணப்படும் அடிப்படை வடிவமைப்பு அம்சங்கள் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும்.

XII. போட்டிக்குச் சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக்கட்டுரை சம்பந்தப்பட்ட போட்டியாளரின் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும். போட்டியின் முடிவுகள் வெளியான பின்னரேனும், ஏதேனும் ஒரு ஆய்வுக்கட்டுரை சம்பந்தப்பட்ட போட்டியாளரின் ஆக்கம் அல்ல என்பது உறுதி செய்யப்பட்டால், அவ்வெற்றி இரத்து செய்யப்படும்.

XIII. இப்போட்டியில் பங்குபற்றும் ஆசிரியர்கள் தமது ஆய்வுக்கட்டுரையுடன் "மாதிரி 03" இற்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை asidisividumaga.research@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டும். (இப்போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை மின்னஞ்சல் வழியாக மாத்திரமே அனுப்ப முடியும்.)

XIV. போட்டித் தொடரின் ஏனைய அனைத்துப் பொதுவான நிபந்தனைகளும் அவ்வாறே ஏற்புடையதாகும்.